# நான் என்ன செய்ய வேண்டும்?

தொடர் - 65

மார்ச் 2014

*தொகுப்பு:* **Dr. B. வில்லியம் தர்மராஜா**

**லூக்கா**

3201 சரீரத்தை கொலை செய்து, அதன்பின்பு அதிகமாக ஒன்றும் செய்யத் திராணியில்லாதவர்களுக்குப் பயப்படாதே (12:4)

3202 கொலை செய்த பின்பு நரகத்திலே தள்ள வல்லமையுள்ளவருக்கே பயப்படு (12:5

3203 உன் தலையிலுள்ள மயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது. ஆகையால் பயப்படாதே (12:7)

3204 மனுஷர் முன்பாக இயேசுவை அறிக்கைப்பண்ணு (12:8)

3205 மனுஷர் முன்பாக இயேசுவை மறுதலியாதே; மறுதலிப்பவன் தேவதூதர் முன்பாக மறுதலிக்கப்படுவான் (12:9)

3206 பரிசுத்த ஆவிக்கு விரோதமாய்த் தூஷணஞ் சொல்லாதே; அவன் மன்னிக்கப்படுவதில்லை (12:10)

3207 ஜெப ஆலயத்தலைவர்களுக்கும், துரைத்தனங்களுக்கும், அதிகாரமுள்ள வர்களுக்கும் முன்பாக உன்னைக் கொண்டு போய் விடும்போது : எப்படி, என்னத்தை மாறுத்தரமாகச் சொல்லுவோம் என்றும், எதைப் பேசுவோம் என்றும் கவலைப்படாதே, நீ பேச வேண்டியவைகளைப் பரிசுத்த ஆவியானவர் அந்நேரத்திலே உனக்குப் போதிப்பார் (12:11,12)

3208 பொருளாசையைக் குறித்து எச்சரிக்கையாயிரு; ஏனெனில் உனக்கு எவ்வளவு திரளான ஆஸ்தி இருந்தாலும், அது உனக்கு ஜீவன் அல்ல (12:15)

3209 தேவனிடத்தில் ஐசுவரியவனாயிராமல், உனக்காகவே பொக்கிஷங்களைச் சேர்த்து வையாதே (12:21)

3210 என்னத்தை உண்போம் என்று உன் ஜீவனுக்காகவும், என்னத்தை உடுப்போம் என்று உன் சரீரத்துக்காகவும் கவலைப்படாதே (12:22)

3211 மிகவும் அற்பமான காரியமுதலாய் உன்னால் செய்யக்கூடாதிருக்க, நீ கவலைப்படுகிறதென்ன? (12:26)

3212 என்னத்தை உண்பேன், என்னத்தைக் குடிப்பேன் என்று, நீ கேளாமலும் சந்தேகப்படாமலும் இரு; இவைகள் உனக்கு வேண்டியவைகளென்று உன் பிதாவானவர் அறிந்திருக்கிறார் (12:29,30)

3213 தேவனுடைய ராஜ்யத்தையே தேடு, அப்பொழுது இவைகளெல்லாம் (உண்ண, குடிக்க, உடுக்க) உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும் (12:31)

3214 பயப்படாதே (12:32)

3215 உனக்கு உள்ளவைகளை விற்று பிச்சைக் கொடு. பழமையாய்ப் போகாத பணப்பைகளையும் குறையாத பொக்கிஷத்தையும் பரலோகத்திலே உனக்கு சம்பாதித்து வை (12:33)

3216 எஜமான் வரும்போது விழித்திருக்கும் ஊழியக்காரனாயிரு (12:37)

3217 நீ நினையாத நேரத்தில் மனுஷகுமாரன் வருவார், ஆகையால் ஆயத்தமாயிரு (12:40)

3218 பணிவிடைக்காரருக்குத் தகுதியான காலத்திலே படிகொடு (12:42)



3219 தன் எஜமானுடைய சித்தத்தை அறிந்தும் ஆயத்தமாயிராமலும், அவனுடைய சித்தத்தின்படி செய்யாமலும் இருக்கும் ஊழியக்காரன் அநேக அடிகள் அடிக்கப்படுவான் (12:47)

3220 எவனிடத்தில் அதிகங் கொடுக்கப்படுகிறதோ, அவனிடத்தில் அதிகங் கேட்கப்படும் (12:48)

3221 உனக்கு எதிராளியானவன் உன்னை அதிகாரியினிடத்திற்குக் கொண்டு போகிற போது, வழியிலேதானே அவனிடத்திலிருந்து விடுதலையாகும்படி பிரயாசப்படு (12:58)

3222 மனந்திரும்பு; மனந்திரும்பாமற்போனால் கெட்டுப்போவாய் (13:3,5)

3223 கனி கொடு (13:6,7,9)

3224 இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசிக்கப் பிரயாசப்படு (13:24)

3225 நீ பந்திக்கு அழைக்கப்பட்டிருக்கும்போது, பந்தியில் முதன்மையான இடத்தில் உட்காராதே (14:8); தாழ்ந்த இடத்தில் உட்காரு (14:10)

3226 உன்னையே நீ உயர்த்தாதே, உயர்த்தினால் தாழ்த்தப்படுவாய்; உன்னையே நீ தாழ்த்து, தாழ்த்தினால் உயர்த்தபடுவாய் (14:11)

3227 நீ விருந்து பண்ணும்போது உன் சிநேகிதரை, சகோதரரை, பந்து ஜனங்களை, ஐசுவரியமுள்ள அயலகத்தாரை அழைக்க வேண்டாம்; ஏழைகளையும் ஊனரையும் சப்பாணிகளையும் குருடரையும் அழைப்பாயாக. அப்பொழுது நீ பாக்கியவானாயிருப்பாய்; அவர்கள் உனக்குப் பதில் செய்யமாட்டார்கள். (14:12-14)

3228 "யாதொருவன் என்னிடத்தில் வந்து, தன் தகப்பனையும் தாயையும் மனைவியையும் பிள்ளைகளையும் சகோதரரையும் சகோதரிகளையும் தன் ஜீவனையும் வெறுக்காவிட்டால் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்" (14:26)

3229 "தன் சிலுவையைச் சுமந்து கொண்டு எனக்குப் பின் செல்லாதவன் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்" (14:27)

3230 ஒரு கோபுரத்தைக் கட்ட மனதாயிருந்தால், அதைக் கட்டித் தீர்க்கிறதற்கு உனக்கு நிர்வாகமுண்டோ இல்லையோ என்று முன்பு உட்கார்ந்து செல்லுஞ் செலவைக் கணக்குப் பார் (14:30)

3231 யுத்தஞ் செய்யப் போகிறபோது, எதிர்க்கக் கூடுமோ கூடாதோ என்று முன்பு உட்கார்ந்து ஆலோசனை பண்ணு (14:31), கூடாதென்று கண்டால், மற்றவன் தூரத்திலுருக்கும்போதே, ஸ்தானாபதிகளை அனுப்பி, சமாதானத்துக்கான வைகளைக் கேட்டுக் கொள் (14:32)

3232 "உங்களில் எவனாகிலும் தனக்கு உண்டானவைகளையெல்லாம் வெறுத்துவிடாவிட்டால் அவன் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்" (14:33)

3233 நீ எப்போதும் கர்த்தரோடிரு (15:31)

3234 மரித்தவன் (காணாமற் போனவன்) திரும்பவும் உயிர்த்தால் (திரும்பவும் காணப்பட்டால்) சந்தோஷப்பட்டு மகிழ்ச்சியாயிரு (15:32)

3235 அநீதியான உலகப் பொருளால் உங்களுக்குச் சிநேகிதரைச் சம்பாதியுங்கள் (16:9)

3236 கொஞ்சத்திலும் உண்மையுள்ளவனாயிரு (19:17); அநீதியுள்ளவனாயிராதே (16:10)

3237 அநீதியான உலகப்பொருளைப் பற்றியும் உண்மையாயிரு (16:11) 8ம் பக்கம் பார்க்க

# ஆச்சரியமான தேவன்

சகோ. B. பொற்செல்வன் ஆசீர்

**அது கர்த்தாராலே ஆயிற்று**
**அது நம்முடைய கண்களுக்கு ஆச்சரியமாயிருக்கிறது.** சங். 118:23

தேவனின் மகத்துவமான செயல்களை, தேவனின் அற்புதமான செயல்களை, தேவனின் அன்பின் செயல்களை தன் வாழ்க்கையில் கண்ட அனுபவித்த சங்கீதக்காரர் தாவீது, அதைத் தன் அனுபவ சாட்சியாக பகிர்ந்து கொள்கிறார்.

அரசர் தாவீதை ஆச்சரியமான நடத்தின தேவன் நம்மையும் நடத்துவார். ஒவ்வொரு வினாடியும் ஆச்சரியமானவைகளை காண வைப்பார். ஒவ்வொரு நிமிஷமும் ஆச்சரியமானவைகளை செய்வார் தேவன். ஒவ்வொரு மணிநேரமும் ஆச்சரியமானவைகளை நமது அனுபவமாக்கித் தருவார் நமது இரட்சகர் இயேசு. ஒவ்வொரு நாளும் ஆச்சரியமானவைகளை நம்மை ருசிக்கச் செய்வார். சர்வ வல்லமையுள்ள தேவன். ஒவ்வொரு வாரமும் ஆச்சரியமானவைகளின் ஊடே நடத்திச் செல்வார். நமது பிரதான மேய்ப்பர் இயேசு. ஒவ்வொரு மாதமும் ஆச்சரியமானவைகளை தருவார் நமது தேவைகளை என்றென்றைக்கும் சந்திக்கும் நித்திய கொடையாளர் “யெகோவாயீரே” ஆகிய தேவன்

நாமும் அவருடைய செயல்களை கண்டு, அது கர்த்தராலே ஆயிற்று அது நம்முடைய கண்களுக்கு ஆச்சரியமாயிருக்கிறது என்று ஒவ்வொரு நிமிடமும் பகிர்ந்து கொள்ளப் போகிறோம் தேவனை துதிக்கப்போகிறோம்.

**தேவன் உயர்த்தும் விதம் ஆச்சரியம்**

ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்த தாவீதை தேவன் கண்டார். ஒருவரும் தேடாது இருந்த அவனை தேவனின் கண்கள் கண்டது (சங். 89:20). பந்தியை தாமதம் பண்ணி ஆடுகளின் நடுவிலிருந்து அழைத்து வர கட்டளை சாமுவேல் தீர்க்கதரிசியிடமிருந்து பிறக்கிறது (1சாமு. 16:11). இப்போது இதுவரை தாவீதை தேடாதவர்கள் அவனைத் தேடி ஓடுகிறார்கள். தேவன் தாவீதை அவர்கள் எல்லாருடைய நடுவில் உயர்த்தி அபிஷேகம் பண்ணினார் (1சாமு. 16:12,13). தேவன் தாவீதை உயர்த்திய விதம் ஆச்சரியமானது. மொர்தெகாய் வளர்ப்பு மகள் எஸ்தர், தாய் தகப்பனை அறியாத அந்த எஸ்தரை தேவன் ராஜாத்தியாக அது அந்நிய தேசத்தில் உயர்த்தினார் (எஸ். 2:17). தேவன் எஸ்தரை உயர்த்திய விதம் ஆச்சரியமானது. அடிமையாய் பிடித்துக்கொண்டு செல்லப்பட்ட தானியேலை தேவன் பாபிலோனிய தேசத்தில் அதிகாரியாக்கினார் தானி. 2:3,6). அந்நிய தேசத்தில் அந்நிய அரசர்கள் காலத்தில் தானியேலின் காரியம் ஜெயமாயிருந்தது (தானி. 6:28) என்று வேதம் கூறுகிறது. இது எத்தனை ஆச்சரியமானது.

இவர்களை உயர்த்தின ஆண்டவர் இயேசு உங்களையும் உயர்த்துவார் கலங்காதிருங்கள்.

**தாவீதின் விசுவாசம்**

கர்த்தர் தாவீதை உயர்த்த காரணம் தாவீதின் விசுவாசம்தான். சங். 23:1 இல் கூறுகிறான்.



கர்த்தர் என் மேய்ப்பராய் இருக்கிறார் நான் தாழ்ச்சியடையேன்.

கர்த்தரை நம்பி சார்ந்து கொண்டான். அவரை தன் வாழ்வில் நடத்துகிறவராய் கண்டான். அரசனாய் உயர்த்தினபோது மாத்திரமல்ல. கோலியாத்தை ஜெயித்தபோது மாத்திரமல்ல, ஆடுகளை மேய்க்கும் சாதாரன ஆட்டிடையனாய் வாழ்ந்தபோதும் தேவன் தன்னை நடத்துகிறவராய் கண்டு துதித்தான். சிங்கமும், கரடியும் வந்தபோதும் முறுமுறுக்காமல் இந்த பாதையில் தேவன் தான் என்னை நடத்துகிறார் என்று தேவனை துதித்தான். ஆகையால் தான் “நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன் தேவரீர் என்னோடே கூட இருக்கிறீர்” சங். 23:4 என்று அறிக்கையிடுகிறான். இது எவ்வளவு அருமையான விசுவாசம் பாருங்கள்.

நாம் தேவன் நம்மை அரசனாக்கினால் அதை தேவன் செய்தார் என்று துதிப்போம். ஆடு மேய்க்கும் இடையனாக வைத்தால் தேவன் எனக்கு அற்புதம் செய்யவில்லையே என கலங்கி முறுமுறுத்து கேள்வி கேட்கிறோம். கோலியாத்தை ஜெயிக்க பெலன் தரும்போது தேவனை துதிக்கிறோம். சிங்கமும், கரடியும், ஓநாயும் போன்ற சோதனைகள் வரும்போது ஏன் தேவன் என்னை சோதிக்கிறார் என்று கூறி சோர்ந்துபோகிறோம். ஆகவே தான் நம்முடைய வாழ்வில் அற்புதம் தடைபடுகிறது. எந்த நிலைமையிலும் தேவனை துதிக்கப் பழகுங்கள். இப்போது தேவன் உங்களை வைத்திருக்கும் இடம், இப்போதுதேவன் உங்களை உங்கள் குடும்பத்தை வைத்திருக்கும் நிலை எதுவானாலும் அதற்காக தேவனை துதியுங்கள், துதித்துக்கொண்டேயிருங்கள்.

நான் தேவனுக்கு விரோதமாய் முறுமுறுக்கமாட்டேன் என்று தீர்மானியுங்கள் காரணம் வனாந்தரத்தில் முறுமுறுத்தவர்கள் அழிக்கப்பட்டார்கள் (1கொரி. 10:10)

முறுமுறுப்பு தேவனுக்கு அருவெறுப்பு. அது அழிவை கொண்டு வரும். துதி தேவனுடையவர்களின் அலங்காரம், அது உயர்வை கொண்டு வரும்.

**எஸ்தரின் போதும் என்ற மனம்**

இராஜாவின் முன்னே செல்ல, இராஜா ராஜாத்தியாய் தெரிந்துகொள்ள ஏராளமான பெண்கள் கன்னிமாடத்தில் இருந்தார்கள். அவர்களை காவல் பண்ண யேகாய் என்ற ஒரு பிரதானி இருந்தான். ஒவ்வொருவரும் இராஜாவின் முன் பிரவேசிக்க போகும்போது அவர்கள் அணிந்துகொள்ள அந்த யேகாய் சிலவற்றை நியமிப்பான் (எஸ். 2:15). அதற்குமேல் என்ன கேட்டாலும் கொடுப்பான் (எஸ். 2:13). எஸ்தர் செல்லவேண்டிய நாள் வந்தபோது யேகாய் என்ன நியமித்தாரோ அதற்கு மேல் எதுவும் கேட்கவில்லை.

நமது தேவைகள் இன்னதென்று தேவன் அறிந்திருக்கிறார் (மத். 6:32) நமது தேவைகளை அறிந்திருக்கிற தேவன் நமக்கு தீமையானதைச் செய்யமாட்டார் என்று விசுவாசித்து தேவனை சார்ந்து கொள்ள எஸதரைப் போல கற்றுக்கொள்ளுங்கள்.

அவர்கள் கேட்டதை அவர்களுக்குக் கொடுத்தார். அவர்கள் ஆத்துமாக்களிலோ இளைப்பை அனுப்பினார். (சங். 106:15). எனவே சோர்வை, இளைப்பை அல்ல

துதியை வாழ்வில் ஆடையாக பெற்றுக்கொள்ள தேவன் நமக்குத் தருவதில் திருப்தியடையுங்கள் காரணம் தேவன் கிரியை செய்யும் விதம் ஆச்சரியமானது. மோசேயின் வாழ்வில் தேவனின் செய்கையைப் பாருங்கள்.

பார்வோனின் குமாரத்தியின் மகளாக பார்வோனின் குமாரத்தி தெரிந்தெடுக்க அனுமதித்த தேவன், அவனை பார்வோன் குமாரத்தியின் மகன் என்பதை வெறுக்கச்செய்து துன்பம் அனுபவிப்பதை தெரிந்துகொள்ளச் செய்கிறார் (எபி. 11:24,25). காரணம் பார்வோன் குமாரத்தியின் மகனாக இருந்தால் அவன் பார்வோனாக மாறியிருப்பான். ஆனால் தேவனோ மோசேயை பார் உன்னை நான் பார்வோனுக்கு தேவனாக்கினேன் (யாத். 7:1) என்று பார்வோனைக் காட்டிலும் உயர்த்துகிறார். பார்வோன் என்பது மனிதத் திட்டம் மோசேக்கு, பார்வோனின தேவன் என்பது தேவனின் திட்டம் மோசேக்கு.

நீங்கள் போடும் திட்டங்களைவிட எப்போதும் தேவனுடைய திட்டம் பெரியவைகளாகத் தான் இருக்கும். தேவனுடைய பெரியதிட்டம் உங்கள் வாழ்வில் நிறைவேற வேண்டுமானால் உங்களுடைய மனித திட்டங்கள் உடைக்கப்பட்டுதான் ஆக வேண்டும்.

எனவே தேவனின் திட்டங்கள் இன்று உங்களுக்கு தெளிவாக விளங்கவில்லை என்றாலும், அவருடைய திட்டங்கள் உங்களை குறித்து நீங்கள் சிந்திக்கிறதை காட்டிலும் பெரியவைகளாகத்தான் இருக்கிறபடியால் உங்களுக்கு தெளிவாக விளங்காத தேவ திட்டங்களுக்காக தேவனை துதித்து தேவன் செய்யும் வரை பொறுமையுடன் காத்திருங்கள். அப்போது பெருமையடைவீர்கள், அதாவது உயர்த்தப்படுவீர்கள்.

**தானியேலின் பரிசுத்தம்**

தேவன் நம்மை உயர்த்த வேண்டுமானால் நம்மில் காணப்பட வேண்டியது பரிசுத்தம். நம்முடைய தேவன் பரிசுத்தர்! எனவே அவருடைய பரிசுத்தத்தை நம்முடைய வாழ்வில் காத்துக்கொள்ள வேண்டும். தானியேல் இராஜாவின் போஜனமானாலும், அது தன்னை தீட்டுப்படுத்துமானால் என்னில் பரிசுத்த குலைச்சலை கொண்டுவருமானால் என்னில் அது வேண்டாம் என தீர்மானம் பண்ணினான். (தானி. 1:8).

நாமும் பரிசுத்தத்தில் உறுதியாய் நிற்கும்போது தானியேலை உயர்த்தின தேவன் நம்மையும் உயர்த்துவார்.

அப்போது நாமும் சொல்லலாம் அது கர்த்தராலே ஆயிற்று. அது நம்முடைய கண்களுக்கு ஆச்சரியமாயிருக்கிறது என்று அல்லேலூயா!

**தேவன் தேவைகளை சந்திக்கும் விதம் ஆச்சரியம்**

ஆபிரகாமின் வாழ்வில் தேவன் ஈசாக்கை கொடுத்தவிதம் ஆச்சரியமானது. 100 வயது சென்ற ஆபிரகாமுக்கு ஈசாக்கை கொடுத்தார். 90 வயதான சாராள் ஈசாக்கை பெற்றெடுத்தாள். காரணம் வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்வர் என்றெண்ணினதுதான் (எபி. 11:11) இல்லாதவைகளை இருக்கிறவைகளைப் போல் அழைக்கிறவராய் இருக்கிற தேவனை விசுவாசித்ததுதான் (ரோமர் 4:17)



நீங்கள் தேவைகளின் மத்தியில் இருக்கிறீர்களா? கலங்கவேண்டாம். உலகம் இல்லை என்று சொல்லும்போது தேவன் உண்டு என்பார். தேவனுடைய அற்புதம் நடக்க சரியான இடம் உலகம், மனிதர்கள் இல்லை, முடியாது, நடக்காது என்று சொல்லும் இடம்தான். உலகமும் மனிதர்களும் இல்லை, முடியாது, நடக்காது என்று சொல்லும் சொல்லை கேட்கும்போது மனுஷரால் கூடாததுதான் ஆனால் தேவனாலே கூடாத காரியம் ஒன்றுமில்லை என்று விசுவாசியுங்கள் (லூக். 1:37)

அப்போது அற்புதங்களை காண்பீர்கள். அப்போது சொல்வீர்கள் அது கர்த்தராலே ஆயிற்று. அது நம்முடைய கண்களுக்கு ஆச்சரியமாயிருக்கிறது என்று தேவன் வனாந்தரத்திலே சில நேரங்களில் நடத்துவார். ஆனால் ஒன்றும் குறைவு படாமல் நம்மை பராமரிப்பார். (நெகே. 9:21). தேவை நிறைந்த வனாந்தரத்தில் இருக்கிறீர்களா? தேவைகள் சந்திக்கப்பட முடியாத வனாந்தரத்தில் இருக்கிறீருகளா? உங்களுக்கு ஒன்றே ஒன்றுதான் தேவை அந்த வனாந்தரத்தில், அது தேவன் மாத்திரமே! தேவன் உங்களோடு வனாந்தரத்தில் இருந்தால் இஸ்ரவேலரோடு இருந்ததுபோல உங்களோடும் இருப்பார்.

1. வனாந்தரத்தில் அவர்களை கைவிடவில்லை. நெகே. 9:19
2. அவர்களை வழிநடத்த பகலிலும், இரவிலும் அவர்களை விட்டுவிலகவில்லை. நெகே. 9:19 (மேகஸ்தம்பமாய் அக்கினிஸ்தம்பமாய் உடன் இருந்தார்)
3. வாய்க்கு மன்னா இல்லாமல் போகவில்லை. நெகே. 9:20
4. அவர்கள் தாகத்துக்கு தண்ணீர் இல்லாமல் போகவில்லை. நெகே. 9:20
5. அவர்கள் வஸ்திரங்கள் பழமையாய் போகவுமில்லை. நெகே. 9:21
6. அவர்கள் கால்கள் வீங்கவுமில்லை. நெகே. 9:21
7. அவர்கள் குறுகவில்லை (நட்சத்திரங்களைப்போல பெருகப் பண்ணினார்) நெகே. 9:23.
8. அவர்கள் இழந்து போகவில்லை (சுதந்தரித்துக் கொண்டார்கள்) நெகே. 9:24.

இஸ்ரவேல் ஜனங்கள் தேவனோடு இருந்த வனாந்திர அனுபவத்தைத்தான் மேலே 8 குறிப்புகளில் படித்தோம். தேவனோடு வனாந்திரமானாலும் வாழுங்கள் நீங்கள் இழந்து போவது ஒன்றுமிராது.

ஆதி. 3:24 அது ஏதேன் ஆனாலும், தேவனை மறந்து பாவம் செய்தால் துரத்தி விடப்படுவோம் என்பதை மறவாதிருங்கள்.

ஆதி. 13:10 அது சோதாம் கொமோரா கர்த்தருடைய தோட்டத்தைப் போலவும் எகிப்து தேசத்தை போலவும் வளம் பொருந்தினதாயிருந்தாலும் பாவம் உங்களில் காணப்பட்டால் (ஆதி. 13:13) அது அழிக்கப்படுவது நிச்சயம் (ஆதி. 19:28).

**தேவன் நடத்தும் விதம் ஆச்சரியம்**

தேவன் யோசேப்பை உயர்த்த எகிப்துக்கு கொண்டு போனார். எகிப்திலே உயர்த்தினார். ஆதி. 39:1. ஆதி. 41:41 தேவன் மோசேயை உயர்த்த எகிப்தை விட்டு வெளியே கொண்டுவந்தார். (எபி. 11:27)

தேவன் தாவீதை உயர்த்த ஆடுகளின் பின்னே இருந்து அரண்மனைக்கு

கொண்டுபோனார். (1சாது. 16:11) தேவன் மோசேயை உயர்த்த எகிப்தின் அரண்மனையிலிருந்து மீதியான் தேசத்தின் வனாந்தரத்தில் கொண்டுவந்து ஆடுகளை மேய்க்கச் செய்கிறார் (யாத். 2:10, யாத். 3:1)

தேவன் நடத்தும் விதம் ஆச்சரியமானது. ஆகையால் ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு அவருடைய பலத்தை கைக்குள் அடங்கியிருங்கள் (1பேதுரு 5:6).

---

3ம் பக்க தொடர்ச்சி

3238 வேறொருவனுடைய காரியத்திலும் உண்மையுள்ளவனாயிரு (16:12)

3239 இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ்செய்யாதே; தேவனுக்கும் உலகப் பொருளுக்கும் ஊழியஞ் செய்ய உன்னாலே கூடாது (16:13)

3240 தன் மனைவியைத் தள்ளிவிட்டு, வேறொருத்தியை விவாகம் பண்ணுகிறவன் விபசாரஞ்செய்கிறான் (16:18)

3241 தீர்க்கதரிசிகளுக்குச் செவி கொடு (16:29,31)

3242 உன்னால் இடறல்கள் வராதிருப்பதாக (17:1), உன்னைக் குறித்து எச்சரிக்கையாயிரு (17:3)

3243 உன் சகோதரன் உனக்கு விரோதமாய் குற்றஞ் செய்தால், அவனைக் கடிந்து கொள்; அவன் மனஸ்தாபப்பட்டால், அவனுக்கு மன்னிப்பாயாக (17:3)

3244 உன் சகோதரன் ஒரு நாளில் ஏழுதரம் உனக்கு விரோதமாய்க் குற்றஞ் செய்து, ஏழுதரமும் உன்னிடத்தில் வந்து : நான் மனஸ்தாபப்படுகிறேன் என்று சொன்னால், அவனுக்கு மன்னிப்பாயாக (17:4)

3245 உனக்குக் கட்டளையிடப்பட்ட யாவற்றையும் செய்த பின்பு : நான் அப்பிரயோஜனமான ஊழியக்காரன், செய்ய வேண்டிய கடமையை மாத்திரம் செய்தேன் என்று சொல்லு (17:10)

3246 உரத்த சத்தத்தோடே தேவனை மகிமைப்படுத்து (17:15,18)

3247 தேவனுக்கு ஸ்தோத்திரஞ் செலுத்து (17:16)

3248 பின்னிட்டுத் திரும்பாதே; லோத்தின் மனைவியை நினைத்துக் கொள் (17:31,32)

3249 சோர்ந்து போகாமல் எப்பொழுதும் ஜெபம் பண்ணு (18:1)

3250 உன்னை நீதிமானென்று நம்பி, மற்றவர்களை அற்பமாய் எண்ணாதே (18:9)

**விருதுநகர் மாவட்டம் ஏழாயிரம் பண்ணை**
**தேவனுடைய கூடாரத்தில் திறப்பின் வாயில் ஜெபம்**

2014 மார்ச் 26, கடைசி புதன் - காலை 10 மணி முதல் மாலை 3 மணி முடிய

*தேவசெய்தி :* **சகோ. T. எடிசன் சாமுவேல்ராஜ்** மதுரை
**சகோ. பா. பொற்செல்வன் ஆசீர்**

**நீங்களும் வாருங்கள்! கலந்து கொள்ளுங்கள்!**

**இயேசு உங்களுக்கு அற்புதம் செய்வார்!!**

**தேவனுடைய கூடாரம்,** மெயின் ரோடு, ஏழாயிரம்பண்ணை-626 201. போன் 04562-258194



# தகாதவைகளை விட்டுவிலகு

**சகோ. S. ஜெபராஜ்** President, Grace Ministries

இன்ப இயேசுவின் இனிய நாமத்தில் யாவருக்கும் நல்வாழ்த்துக்கள். புத்தாண்டில் “எனது விசுவாச வாழ்வு அறிக்கைகள்” என்ற தலைப்பின் கீழ் கடந்தமாத இதழில் களைந்து போட வேண்டிய மோசம் போக்கும் இச்சை, அந்தகாரத்தின் கிரியைகள், கெட்டுப்போகிற பழைய மனுஷன் ஆகியவற்றைக் குறித்து தியானித்து விட்டுவிட, களைந்துபோட வேண்டிய காரியங்களை களைந்து, தீர்மானித்து, விசுவாசித்து அறிக்கை செய்திருப்பீர்கள் என விசுவாசிக்கிறேன். விட்டுவிடத் தீர்மானிக்க வேண்டிய இன்னும் சில காரியங்களை, குறிப்பாக வேதவசனம் விட்டுவிட சுட்டிக் காண்பிக்கிற காரியங்களை தீர்மானித்து விசுவாசித்து அறிக்கை செய்து விட்டுவிட தேவன் உதவி செய்வார்.

வம்பும், புத்தியீனமான பேச்சும், பரியாசமும், தகாதவைகள்; ஸ்தோத்திரம் செய்தலே தகும். (எபே. 5:4). "Let there be no filthiness, nor foolish and sinful talk, nor coarse jesting which are not fitting"

**1. வம்பு (Filthiness)**

ஆதியாகமம் 19ம் அதிகாரத்தில் சோதோம் பட்டணத்து மனிதர்களின் நடக்கைகளைக் குறித்து வாசிக்கிறோம். லோத்து தன் வீட்டில் இராத்தங்கும்படி அழைத்துச் சென்று இரண்டு தூதர்களையும் வெளியே கொண்டுவரும்படி சோதோம் பட்டணத்து மனிதராகிய வாலிபர் முதல் கிழவர் மட்டுமுள்ள ஜனங்கள் அனைவரும் நானாதிசைகளிலுமிருந்து வீட்டைச் சூழ்ந்து கொண்டார்கள். (ஆதி. 19:5). அந்த ஜனத்தின் கூக்குரல் கர்த்தருடைய சமுகத்தில் பெரிதாயிருந்தது. அந்தப் பட்டணத்து எல்லாக் குடிகளையும் பூமியின் பயிரையும் அழித்துப் போட்டார். (ஆதி. 19:25). எல்லோரும் வழி விலகி ஏகமாய் கெட்டுப்போனார்கள். (சங். 53:3). They are altogether become filthy. கொலோசெயர் திருச்சபைக்கு அப்போஸ்தலராகிய பரிசுத்த பவுல் ஆலோசனை கூறுகிறார்: உங்கள் வாயில் பிறக்கலாகாத தூஷணமும் வம்பு வார்த்தைகளுமாகிய இவைகளையெல்லாம் விட்டுவிடுங்கள். (கொலோ. 3:8). உங்களுடைய வாழ்க்கையில் வம்பான பேச்சுகளும், வம்பு நிறைந்த செயல்களும் காணப்படும் எனில் அவைகள் தேவனுக்குப் பிரியமானவைகள் அல்ல என்பதை உணர்ந்து அவைகளை விட்டு விலகிவிடத் தீர்மானிப்போம். நீங்கள் எல்லாவித அழுக்கையும் கொடிய துர்க்குணத்தையும் ஒழித்துவிட்டு உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ள வசனத்தைச் சாந்தமாய் ஏற்றுக்கொள்ளுங்கள் (யாக். 1:21). அசட்டைப் பண்ணுகிறவர்கள், துணிகரக்காரர், அகங்காரிகள், மகத்துவங்களை தூஷிக்க அஞ்சாதவர்கள் - இவர்கள் தங்கள் கேட்டிலே கெட்டழிந்து அநீதத்தின் பலனை அடைவார்கள் (2பேது. 2:10-12). உங்களுடைய வாழ்க்கையின் ஒவ்வொரு கிரியைகளும் தேவனுக்கு முன்பாக பிரியமுள்ளவைகளும் பரிசுத்தமுள்ளவை

களுமாய் இருக்கட்டும். அப்படி என்னால் செயல்படமுடியும் என விசுவாசித்து அறிக்கை செய்யுங்கள். தேவன் வாய்க்கச் செய்வார்.

### 2. புத்தியீனமான பேச்சு (Foolish & sinful talk)

"புத்தியீனமான பேச்சு" என்பதை ஆங்கில மொழியாக்கத்தில் "முட்டாள்தனமும், பாமமுமான சம்பாஷணை" என வாசிக்கிறோம். இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும் (மத். 12:34). மூடரின் வாய் புத்தியீனத்தைக் கக்கும் (நீதி. 15:2). நீதிமானின் வாய் ஜீவ ஊற்று (நீதி. 10:11). வீம்புகாரரிடம் வீம்பு பேசாதே (சங். 75:4). துன்மார்க்கருடைய துரோகப் பேச்சு என் உள்ளத்திற்குத் தெரியும் அவன் கண்களுக்கு முன் தெய்வ பயம் இல்லை. சங். 36:1. நயவசனிப்பினாலும், இச்சக பேச்சினாலும், கபடில்லாதவர்களின் இருதயங்களை வஞ்சிக்கிறார்கள் (ரோமர் 16:18). சீர்கேடான வீண் பேச்சுக்களுக்கு விலகியிரு (1தீமோ. 6:20). நீங்கள் தெளிவான பேச்சை நாவினால் வசனியாவிட்டால் பேசப்பட்டது இன்னதென்று எப்படித் தெரியும்? (1கொரி. 14:9). நாவானது சிறிய அவயவமாயிருந்தும் பெருமையானவைகளைப் பேசும். நாவும் நெருப்புத்தான், அது அநீதி நிறைந்த உலகம். நாவானது முழுச் சரீரத்தையும் கறைப்படுத்தி, ஆயுள் சக்கரத்தைக் கொளுத்தி விடுகிறதாயும் இருக்கிறது (யாக். 3:5,6). நாவின் வார்த்தைகள் சாவுக்கேதுவான விஷம் நிறைந்ததாயிருக்கிறது. நாவினால் பேசப்படுகிற பாவம் நிறைந்த வார்த்தைகள், பாவத்தின் சம்பளமாகய மரணத்திற்குக் காரணமாகி விடுகிறது. வாலிபனான தீமோத்தேயுவிற்கு பவுல் அடிகளார் கூறுகிற அறிவுரை : ஓ தீமோத்தேயுவே, நீ சீர்கேடான வீண் பேச்சுகளுக்கு விலகு (1தீமோ. 6:20). ஆகாத சம்பாஷணை நல்லொழுக்கத்தைக் கெடுக்கும். தேவையற்ற தூஷணமான வார்த்தைகளைப் பயன்படுத்துவதும் வாக்குவாதங்களில் ஈடுபடுவதும் நம்முடைய நாவினால் தேவனுக்கு விரோதமாக பாவம் செய்ய வழிநடத்திவிடும். ஞானம் நிறைந்த, புத்தியுள்ள வார்த்தைகளை மட்டும் பயன்படுத்துவேன் என விசுவாச அறிக்கை செய்வோம்.

### 3. பரியாசம் (Jesting)

துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும் பாவிகளுடைய வழியில் நில்லாமலும், பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமலும் என சங்கீதம் 1:1ல் வாசிக்கிறோம். இவர்கள் 'Mockers' அல்லது பரியாசம் செய்கிறவர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். இன்றைக்கு அநேகருடைய பொழுதுபோக்கு மற்றவர்களை பரியாசம் பண்ணுவதாய் இருக்கிறது. அதை மகிழ்ச்சிக்காக, நேரப்போக்கிற்காக செய்கிறோம் எனக்கூறகின்றனர். அன்பான தேவனுடைய பிள்ளைகளே, உங்கள் வாழ்க்கையில் மற்றவர்களை கேலி செய்து, குறைகூறி, மனம் புண்படச் செய்து இருக்கிறீர்களோ? விளையாட்டாகக் கூட இந்த பாவத்தை செய்யாதிருங்கள். இப்படி காரியங்களைச் செய்கிற மக்கள் உட்காருகிற இடத்தில் நீங்களும் உட்காராதிருங்கள். தெலீலாள், சிம்சோனைப் பார்த்து நீ என்னை மூன்று விசை பரியாசம் பண்ணினாய் அல்லவா? என்று வார்த்தைகளினாலே அவனைத் தினம் தினம் நெருக்கி அலட்டிக் கொண்டிருந்தபடியால் சாகத்தக்கதாய் அவன் ஆத்துமா விசனப்பட்டது. தன் இருதயத்தை வெளிப்படுத்தினான் அவளுக்கு. சிம்சோனின் தலை சிரைக்கப்பட்டது, பலம் அவனை விட்டு நீங்கிற்று, கண்கள் பிடுங்கப்பட்டது. வெண்கல விலங்கிடப்பட்டான். சிறைச்சாலையிலே மாவரைத்துக் கொண்டிருந்தான். (நியா. 16:16-21). அவனுடைய முடிவோ பரிதாபமாய் மாறிபோய் விட்டது. ஏழையைப் பரியாசம் பண்ணுகிறவன் அவனை உண்டாக்கினவரை நிந்திக்கிறான் (நீதி. 17:5). மற்றவர்களை பரியாசம் பண்ணுகிற உங்கள் உதடுகளை தேவசமூகத்தில் ஒப்புவித்து தேவன் பரிசுத்தப்படுத்தும்படியாக விண்ணப்பம் பண்ணுங்கள். கடந்து வந்த பரியாசப் பாதைகளை விட்டு விலகி, விசுவாச அறிக்கை செய்யுங்கள். தேவன் உங்கள் உதடுகளைக் காத்துக் கொள்ளுவார். தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை.

*எனது விசுவாச வாழ்வு அறிக்கை :* வம்பும், புத்தியீனமான பேச்சையும், பரியாசமுமான தகாதவைகளையும் விட்டு விட்டு, ஸ்தோத்திரஞ் செய்தலே தகுதி என அதைச் செய்ய அர்ப்பணிக்கிறேன்.

---

## *பணித்தளங்களில் தேவன் செய்த கிரியைகளுக்காய் தேவனைத் துதிப்போம்*

**தூத்துக்குடி மாவட்டம்**

பணித்தளம் : **பேட்மாநகரம்** – கட்டப்பட்டு வருகிற ஆலய கட்டுமான பணிகளுக்காய் தேவனைத் துதியுங்கள்.

பணித்தளம் : **ஸ்ரீமூலக்கரை** – புதிய மிஷனெரி ஆலயம் கட்டி பிரதிஷ்டை செய்ய கிருபை செய்ததற்காக... சகோதரி செல்வி கொடியரசிக்கு ஆண்குழந்தை தந்து சுக பெலத்தினால் காத்த கிருபைக்காக...

பணித்தளம் : **தாதன்குளம்** – ஆராதனை நடத்த இடம் வாங்க தடைகளை கர்த்தர் மாற்றினார்.

**அரசகுளம்** கிராமத்தில் உள்ள சிறுமி விமலாவுக்கு இருந்த கேன்சர் நோயிலிருந்து தேவன் பூரண சுகம் கொடுத்ததற்காக துதியுங்கள்.

பணித்தளம் : **ஆண்டாள்நகர்** – சிறுவர் முகாம், குடும்ப முகாம், 17வது ஆலய பிரதிஷ்டை ஆராதனை, ஞானஸ்நான ஆராதனையும் நடத்த உதவி செய்த தேவனைத் துதிப்போம். ஆலய சுற்று சுவர் கட்டுமானப் பணி துவங்கவும், சமத்துவபுரம், சகோ. குமார் அவர்கள் வீட்டில் ஆராதனை நடத்த இல்லத்தை தேவன் திறந்து கொடுத்ததற்காக துதியுங்கள்.

**அரியலூர் மாவட்டம் – மிஸ்பா**

பணித்தளம் : **வெத்தியார்வெட்டு** – சகோதரி. ராஜேஸ்வரி, சகோ. ராஜி, சகோ. விஜயபாலன் அவர்களை சபைக்கு தேவன் அழைத்து வந்ததற்காக... சகோ. கல்யாண சுந்தரம் பஸ்சில் இருந்து இறங்கியபோது தடுமாறி விழுந்ததில், காயம் எதுவும் ஏற்படாமல், வலி எல்லாம் கர்த்தர் மாற்றினதற்காக துதியுங்கள்.

பணித்தளம் : **வெத்தியார்வெட்டு** – சகோ. மோகன் என்பவரின் மூத்த மகனுக்கு இருந்த வலிப்பு வியாதியிலிருந்து விடுதலை கொடுத்ததற்காக துதியுங்கள்.

**விருதுநகர் மாவட்டம்**

பணித்தளம் : **சாத்தூர் ரூரல்** – சகோ. மேரி அவர்களின் கணவருக்கு உடலில் பரிபூரண

சுகம் கொடுத்த தேவனைத் துதியுங்கள்.

**நல்லான் செட்டிப்பட்டி** – சகோ. சிநேகாவிற்கு அசுத்த ஆவியின் பிடியிலிருந்து விடுதலை கொடுத்ததற்காக...

**ஒத்தையால்** – சகோ. செல்வி என்றவருக்கு 7 வருடத்திற்கு பிறகு குழந்தை பாக்கியம் கொடுத்ததற்காக...

**ஸ்ரீரெங்கபுரம்** – சகோதரி. ஆர்த்தியின் ஆண்குழந்தைக்கு இருந்த மூச்சு திணரலில் இருந்து பூரண சுகம் கொடுத்ததற்காக...

பணித்தளம் : **பழைய செந்நெல்குளம்** – சகோ. ஜெயாமேரி, ராஜலெட்சுமி, சகோ. ரமேஷ்குமார், 7ம் வகுப்பு மாணவன் சுபின், சகோ. ஐயம்மா, பஞ்சவர்ணம், மரியாள் இவர்களின் கட்டுகளை உடைத்து கர்த்தர் அபிஷேகித்ததற்காக...

பணித்தளம் : **பண்டிதன்பட்டி** – ஆலத்தூர், சகோ. வைரமுத்துவிற்கு டூவிலர் வண்டி வாங்கியதற்காகவும், தெற்குளம்பட்டி, சகோதரி. பொன்மணி கர்ப்பந்தரித்ததிற்காகவும், சகோதரி. சுகந்தி தலைபிரசவத்தில் நல்ல ஒரு ஆண்குழந்தையை தந்ததற்காகவும் தேவனைத் துதியுங்கள்.

பணித்தளம் : **ஏழாயிரம்பண்ணை** – தேவனுடைய கூடாரத்தில் நடைபெற்ற சிறுவர் முகாமை தேவன் ஆசீர்வதித்து தேவைகளை சந்தித்து அற்புதமாய் நடத்தித் தந்த தேவனைத் துதிப்போம்.

பணித்தளம் : **சிவகாசி – முத்துசாமிபுரம்** – சகோதரி. பிரேமா அவர்கள் காணாமல் போன நகைகள் 3 மாதங்களுக்குப்பின் கிடைத்ததற்காய்...

பணித்தளம் : **N. திருவேங்கடபுரம்** – சகோ. பவுலுக்கு கர்த்தர் தந்த சுகத்துக்காக, சகோதரி. செல்வராணி ஞானஸ்நானம் எடுத்ததற்காக... சகோ. மோசே அவர்களை விபத்தில் இருந்த தேவன் காத்ததற்காக... அவர்கள் மூலம் ஆலயத்திற்கு சமையல் பாத்திரம் தேவன் சந்தித்ததற்காக துதியுங்கள்.

**திருநெல்வேலி மாவட்டம்**

பணித்தளம் : **திருவேங்கடம்** – சகோதரி. ஜீவிதாவிற்கு தேவன் கொடுத்த நல்ல வேலைக்காக துதியுங்கள்.

பணித்தளம் : **அழகப்பபுரம்** – திருமலாபுரத்தில் புதிய ஆராதனை நடத்த கிருபை தந்த தேவனை துதியுங்கள்.

பணித்தளம் : **மைப்பாறை** – ஆலயத்தில் பெயிண்ட் வேலை முடித்ததற்காக.... சகோ. ஜெபராஜ் தலைசுற்றிலிருந்து தேவன் சுகம் கொடுத்ததற்காக துதியுங்கள்.

**மதுரை மாவட்டம்**

பணித்தளம் : **திரளி** – ஆலயத்தின் சுவர் பூசப்படவும், வெள்ளை அடிக்கவும், ஆலயப்பெயர் எழுதவும் செய்த கிருபைக்காக துதியுங்கள். சகோ. மேகலா – மூர்த்தி அவர்களின் மகனுக்கு ஆப்ரேஷன் வெற்றியாய் முடிந்து சுகம் தந்ததற்காக.... சகோதரி. ஜெபாவுக்கு வீடு திருப்ப பணத்தேவை சந்திக்கப்பட்டு சொந்த வீட்டில் வாழச் செய்த கர்த்தரை துதியுங்கள்.

**தூத்துக்குடி மாவட்டம்**

பணித்தளம் : **திருக்களூர் – செம்பூர்,** சகோதரி. எஸ்தருக்கு சுகப்பிரசவத்தில் ஆண் குழந்தையும், **பால்குளம்** – சகோதரி. எஸ்தர் ராணிக்கு பெண் குழந்தையையும் தேவன் கொடுத்ததற்காக... **செக்கனூர்** – சகோ. முத்துப்பாண்டியின் வீடு கட்டி முடிக்க செய்ததற்காக... **செம்பூர்** – சகோதரி. ரதிகனிக்கு பிரஷரில் இருந்தும், சகோதரி. கிரேஸுக்கு



கல்லடைப்பில் இருந்தும் தேவன் சுகம் கொடுத்ததற்காக... **தேமான்குளம்** – சகோதரி. தேவிக்கு வீடுகட்டுவதற்கான தேவைகளை தேவன் சந்தித்ததற்காக துதியுங்கள்.

## *பணித்தளங்களுக்காய் ஜெபியுங்கள்*

**தூத்துக்குடி மாவட்டம்**

பணித்தளம் : **பேட்மாநகரம்** – ஆலய கட்டுமானப் பணி விரைவில் முடியவும்; பேரூரில் உள்ள சகோ. வேலுத்தவர், சகோ. மணிகண்டன் அவர்கள் பரிபூரண சுகம் கிடைக்க ஜெபியுங்கள்.

பணித்தளம் : **கீழத்தட்டப்பாறை** – சகோதரி. பரமேஸ்வரி அவர்களின் மூட்டு வலிக்காகவும், சகோ. சிவன் அவர்களின் பலவீனத்திலிருந்து விடுதலை கிடைக்க... **வடக்கு சிலுக்கன்பட்டியில்** உள்ள சகோ. வின்சன்ட் அவர்களின் கால் விபத்தினால் நொறுங்கியுள்ளது. அவர்களின் காலில் பூரண சுகம் உண்டாக...

பணித்தளம் : **ஸ்ரீமூலக்கரை – திருப்புளியங்குடி** கிராமத்தில் உள்ள சகோ. மோசஸ் அவர்களுக்கு ஏற்ற துணை கிடைக்கவும்...

பணித்தளம் : **தூத்துக்குடி ரூரல்** – பிரமுத்துவிளை கிராமத்தில் சகோதரி. ஜுனிகமல், எலிசபெத், நர்கீஸ், மேலசாந்தி, சாந்தி இவர்களுக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க... சகோதரி. பிரியா, ஜெபா, சோபியா, அனிட்டா, விநோதா இவர்களின் திருமணத்திற்காகவும், சகோ. பொன் பிரேம்குமார், சகோ. பிரபாகரன், சகோதரி. செல்வி இவர்களுக்கு நிரந்தர வேலை கிடைக்கவும், சகோதரி. கிருபா, சகோ. ஜோசுவா சாமுவேல் +2வில் நல்ல மதிப்பெண் எடுக்கவும், சகோதரி. பொன்னுத்தாய் அவர்களின் கால்வலி சுகமாகவும் ஜெபிக்கவும்.

பணித்தளம் : **தாளமுத்துநகர்** – சகோ. ஆசீர்வாதம் அவர்களின் திருமணத் தடைகள் நீங்கவும், சகோதரி. கீதா, காளிதாஸ் இவர்களின் பிரச்சனை நீங்கி சேர்ந்து வாழவும், சகோதரன் அமல்ராஜ் குடும்பத்துக்கு குழந்தை பாக்கியம் கிடைக்கவும், சகோ. பிரேம்குமார் மனைவிக்கும், சகோதரி. பொன்னுத்தாய் அவர்களுக்கும் இருக்கிற வயிற்று பகுதியில் உள்ள பிரச்சனை நீங்கி சுகம் அடையவும் ஜெபிக்கவும்.

பணித்தளம் : **தாதன்குளம்** – சகோ. கொம்மையா குடும்பத்தில் உள்ள கடன் பிரச்சனை மாறவும், அரசகுளத்தில் உள்ள சகோ. கார்த்திக் அவர்களின் திருமணக் காரியம் நேர்த்தியாய் நடக்க, தேவைகள் சந்திக்கப்பட, காரசேரியில் உள்ள சகோதரி. அன்னாளின கால் வலி மாற, சீனார்குளம், சகோதரி மூக்கம்மாள் அவர்களின் ஞானஸ்நான தடைகள் மாற, கருங்குளம் சகோ. மணிகண்டன் இருதயத்தில் ஆப்ரேஷன் நல்லபடியாக முடிக்கவும் ஜெபியுங்கள்.

பணித்தளம் : **ஆண்டாள்நகர்** – ஆலய சுற்றுசுவர் கட்டும் பணி சீக்கிரம் முடியவும், மிஷனெரி ரெபேக்காள் அவர்களின் தகப்பனாருக்கு, சுகர் 400க்கும் மேல் இருப்பதால் அவர்கள் நடக்க முடியாத சூழ்நிலையில் உள்ளார்கள். இவர்களுக்கு தேவன் பூரண சுகம் கொடுக்கவும், சகோதரி. பரிமளம், பானுமதி, ஆஷா இவர்களின் சம்பளப் பணம் மாதாமாதம் சரியாக கிடைக்கவும் ஜெபிப்போம்.

**அரியலூர் மாவட்டம் – மிஸ்பா**

பணித்தளம் : **வெத்தியார் வெட்டு** – சகோ. கல்யாணசுந்தரம் அவர்களின் காணாமல் போன மகன் திரும்ப வந்து சேரவும், இருதயபுரம், சகோதரி. ஆஷீபா, கல்பனா அவர்களின் சுகப்பிரவத்திற்காகவும், இளையபெருமாள் நல்லூரில் உள்ள சகோ. மணிக்கு மனநிலை

பாதிப்பிலிருந்து கர்த்தர் விடுதலை கொடுக்க.... சகோ. சின்ராசுக்கு புற்று நோயிலிருந்து விடுதலை பெறவும்... காட்டத்தூர், சகோதரி. ராஜலெட்சுமிக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க... சகோதரி. ரஷிகா கடன் பிரச்சனை மாறவும் ஜெபியுங்கள்.

பணித்தளம் : **வெத்தியார் வெட்டு** – சபைக்கு விரோதமாய் பேசுகிறவர்களுக்காக... **பிச்சனூரில்** – சகோ. மோகன் பிசாசுப் பிடியில் இருந்து விடுதலை கிடைக்கவும்... இளைய பெருமாள் நல்லூரில் உள்ள சகோ. சின்ராசுக்கு கேன்சர் வியாதியில் இருந்து பூரண சுகம் கிடைக்க, **இருதயபுரம் கிராமத்தில்** பாரம்பரிய தடைகள் நீங்க ஜெபியுங்கள்.

**விருதுநகர் மாவட்டம்**

பணித்தளம் : **சாத்தூர் ரூரல்** – சகோ. போத்திராஜ் கடன் பிரச்சனை நீங்கவும், சகோ. வெண்ணிலாவின் வயிற்றுவலி நீங்கி தொடர்ந்து பள்ளிக்குச் செல்லவும்.

**ஆலம்பட்டி,** சகோதரி. சத்யா அவர்களின் கணவர் குடிப்பழக்கத்திலிருந்தும், விக்கிரக கட்டிலிருந்தும் விடுபட, சகோதரி. பழனியம்மாள் தாயார் அசுத்த ஆவியின் பிடியிலிருந்து பரிபூரண விடுதலை கிடைக்க, ஸ்ரீரங்கபுரம் கணேசன் அசுத்த ஆவியின் பிடியிலிருந்து பூரண விடுதலை பெறவும், சாத்தூர், சகோ. முனீஸ்வரன் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெறவும் ஜெபியுங்கள்.

பணித்தளம் : **ஜமீன்சல்வார்பட்டி** – சகோதரி. மாரீஸ்வரி, சகோதரி. ராசம்மாள் திருமணக் காரியம் வாய்க்கப்பட.... **பூச்சக்காப்பட்டி,** சகோ. சரவணக்குமார் திருமண காரியம் வாய்க்கப்பட... **பெத்தேல்பட்டியில்** உள்ள ஜனத்தின் பாரம்பரியக் கட்டுகள் மாற... **முதலிப்பட்டி,** சகோ. டேனியல் தோல் அரிப்பு சுகமாக... நாரணாபுரம், பெத்தேல்பட்டி, செல்லயநாயக்கன்பட்டி, கல்போது, முதலிப்பட்டி ஆகிய இடங்களில் சிறுவர், வாலிபர் கூடுகைகள் தொடர்ந்து நடக்க ஜெபியுங்கள்.

பணித்தளம் : **பழைய செந்நெல்குளம்** – சகோதரி. பஞ்சவர்ணத்துக்கு 17 வருடம் குழந்தை இல்லை. குழந்தை பாக்கியம் கிடைக்கவும், சகோதரி. ஜெயாமேரி பிரிந்த கணவர், சகோ. மோகன் மனைவி பிரிந்த குடும்பம் சேர்ந்து வாழ ஜெபியுங்கள்.

பணித்தளம் : **பண்டிதன்பட்டி** – சகோதரி. வள்ளி, கஸ்தூரி இரண்டாம் வருட பி.இ. படிப்பிற்கு ஏற்படுகின்ற தடைகள் மாற... சகோதரி. சித்ராவுக்கு சுகப்பிரசவம் கிடைக்க... சகோதரி. பூங்கொடிக்கு சரீரத்தில் காணப்படுகின்ற பெலவீனங்கள் மாறவும், **நாகப்பாளையம்** சகோ. தங்கவேல் இடது காலில் சர்க்கரை நோயால் ஏற்பட்ட புண் பூரண சுகம் கிடைக்க, தேவைகள் சந்திக்கப்பட, சகோதரி. மல்லிகா சுகப்பிரசவம் கிடைக்க ஜெபியுங்கள்.

பணித்தளம் : **முத்தாண்டிபுரம்** – சகோ. ராஜாவின் கால் செயல்படாமல் ஒரே இடத்தில் படுத்த படுக்கையாக இருப்பதால் குணமடைய ஜெபியுங்கள். **ரெட்டியார்பட்டி** சிறுவன் சிவகார்த்திற்கு அடிக்கடி மூச்சுத்திணறல் ஏற்படுவதால் ஜெபிக்கவும், சகோதரி. புவனாவிற்கு கர்ப்பத்தின் கனி கிடைக்க ஜெபியுங்கள்.

பணித்தளம் : **ஏழாயிரம்பண்ணை** – பவுல் ஐயா அவர்களுக்கு கேன்சர் வியாதியிலிருந்தும், சகோ. டேவிட் என்பவருக்கு இழுப்பு நோயிலிருந்தும் பூரண சுகம் கிடைக்க ஜெபியுங்கள். **அப்பனம்பட்டி,** சகோதரி. பவுன் மாரியம்மாள் அவர்களுக்கு குழந்தை பாக்கியம் கிடைக்கவும்... **சிவசங்குபட்டி** கிராமத்தில் சகோதரி. கிருஷ்ணவேணிக்கு அசுத்த ஆவியிலிருந்து விடுதலை கிடைக்கவும், சகோதரி காளியம்மாள் கணவர் குடிப்பழக்கத்தில் இருந்து மனந்திரும்பவும், சகோ. சுந்தர் ராஜ்க்கு



பிட்ஸ் வியாதியிலிருந்து கர்த்தர் விடுதலை தருவதற்காக... **ஊத்துப்பட்டி** கிராமத்தில் சிறுவர் ஊழியம் நடைபெறவும், சகோதரி. ஜோதிக்கு தொண்டையில் காணப்படுகிற கட்டி சுகமாகவும்... **மடத்துப்பட்டி** என்ற கிராமத்தில் சிறுவர் ஊழியத்திற்கு காணப்படுகிற மனுஷர் தடைகள், விக்கிரகத்தின் தடைகள் மாறவும் ஜெபியுங்கள். **கரிசல்பட்டி,** சகோதரி. லட்சுமிக்கு கால் பகுதியில் காணப்படும் புண் ஆறவும் எழுந்து நடக்கவும், சகோ. மாயக்கண்ணனுக்கு படிப்புக்கு தகுந்த வேலை கிடைக்க... **மார்த்தாண்டம்,** சகோதரி. மேரி பரமானந்தம் அவர்களுக்கு கிடைக்க வேண்டிய அரசாங்க உதவித் தொகை கிடைக்கவும், இயேசுவோடு இனிய வாலிபர் மாலையில் வாலிப பிள்ளைகள் கலந்து கொள்ளவும், திறப்பின் வாயில் ஜெபத்திற்கு கிராமங்களில் இருந்து அநேகர் கலந்து கொள்ளவும் ஜெபியுங்கள்.

பணித்தளம் : **அய்யனேரி** – சகோ. நல்லசாமிக்கு இரண்டு காதுகளிலும் உள்ள வலி குறையவும், தேவர்குளம் கிராமத்தில் உள்ள சகோ. சுந்தர்ராஜ் கால்கைகளின் நடுக்கம் குறையவும், சகோதரி. சந்திரா 10 வருடங்களாக குழந்தை இல்லை. அவர்களுக்கு கர்ப்பத்தின் கனியை தேவன் தரும்படியாகவும், சகோதரி. கிருபா ஜான்சிக்கு கர்ப்பம் திறக்கப்படவும், அய்யனேரியில் ஆலயம் கட்டுவதற்கு உள்ள தடைகள் மாறவும் ஜெபியுங்கள்.

பணித்தளம் : **சிவகாசி** – சகோ. குருசாமி, சகோ. கண்ணன் அவர்களில் காணப்படும் கட்டியில் இருந்து பூரண சுகம் கிடைக்க... சகேதரி. திவ்யாசாந்திக்கு சுகப்பிரசவம் நடைபெறவும், சகோதரி. செல்ஸ்டா, ராஜேஸ்வரி, மேரி, லீதியாள் இவர்களுக்கு குழந்தை பாக்கியம் கிடைக்கும்படியாகவும், சகோதரி. வனஜா அவர்கள் கண் அறுவை சிகிச்சை தவறுதலானதினிமித்தம் கண் பார்வை சரியில்லை. மீண்டும் அறுவை சிகிச்சை செய்ய தேவைகள் சந்திக்கப்பட, இழந்த பார்வை திரும்ப கிடைக்க ஜெபியுங்கள்.

பணித்தளம் : **N. திருவேங்கடபுரம்** – உறுதியான பாலம் கட்டப்பட, சகோ. மோகன் குடும்பத்திற்கு குழந்தை பாக்கியம் கிடைக்கவும், சகோ. ஈசாக்கு அவர்களின் தொழிலில் நல்ல வருமானம் கிடைக்கவும், கன்னித்தேவன்பட்டியில் புதிய ஆலயம் கட்டப்பட ஜெபியுங்கள்.

**திருநெல்வேலி மாவட்டம்**

பணித்தளம் : **திருவேங்கடம்** – சகோ. பவுல்ராஜ் வீடுகட்ட, தேவைகள் சந்திக்கப்பட, சகோ. ஜெயபால் துர் உபதேசத்திலிருந்து விடுதலை பெறவும், ஆலயத்திற்கு வாங்கப்பட்ட நிலத்திற்கு பட்டா கிடைக்கவும், முத்துரெட்டியபட்டி கிராமத்தில் உள்ள ஏஞ்சல் பாப்பாவிற்கு அடிக்கடி வருகிற தலைவலியில் இருந்து பூரண சுகம் கிடைக்கவும் ஜெபியுங்கள்.

பணித்தளம் : **அத்தியூத்து** – சகோதரி. ராமு, மகேஷ்க்கு கர்ப்பத்தின் கனி கிடைக்கவும், சிறுக்கன்குறிச்சி, சகோதரி. கமலா, சகோ. யோவான் ஆஸ்துமா குணமாகவும், சகோ. விக்டர் ராஜின் கல்லடைப்பு சுகமாக... சகோதரி. செல்லத்தாய், சகோ. கணபதி பிரஷர், சுகர் வியாதியிலிருந்து சுகமாக... சகோ. சபாபதி தொண்டையில் கேன்சர் இவற்றிலிருந்து தேவன் பரிபூரண சுகம் கொடுக்க ஜெபியுங்கள்.

பணித்தளம் : **அழகப்பபுரம்** – மிஷனெரி ஆலய கட்டுமானம் சீக்கிரமாய் முடியவும், தேவைகள் சந்திக்கப்படவும், சகோ. ஜெபராஜ் அவர்களின் ஆஸ்துமா வியாதி குணமாக..

பணித்தளம் : **மைப்பாறை – நரிக்குளம்,** சகோ. குருசாமி விபத்தில் அடிபட்டுள்ளார். அவருக்கு நல்ல சுகம் ஆரோக்கியம் கிடைக்க ஜெபியுங்கள்.

### திருச்சி மாவட்டம்

பணித்தளம் : **தோப்புப்பட்டி** – சகோ. ஆறுமுகம், சகோதரி. இருதயமேரி உடம்பு எரிச்சலில் இருந்து விடுதலை பெறவும், சகோ. ஜெர்லின் சிறுநீரக பிரச்சனையிலிருந்தும், சகோதரி. ஜோஸ்பின் மேரிக்கு ஆஸ்த்துமா பிரச்சனையிலிருந்தும், சகோதரி. ஆரோக்கியம்மாள் குடும்பம் செய்வினை கட்டுகளில் இருந்தும் விடுவிக்கப்படவும், சகோதரி. சிறுமணிக்கு நல்ல வாழ்க்கைத் துணை கிடைக்கவும், சகோதரி. மாரியம்மாளுக்கு சுகப்பிரசவத்திற்காகவும் ஜெபியுங்கள். **பேசங்கம்பட்டியில்** சகோதரி. சகுந்தலாவுடைய ஊனமுற்ற கால் சரியாகவும், சகோதரி. அருள்மேரிக்கு உடைந்த கால் சரியாகவும் ஜெபிக்கவும்.

### மதுரை மாவட்டம்

பணித்தளம் : **திரளி** – சகோதரி. ஜெயமாலா மற்றும் சகோ. அஜய் தேவதாசன் குடும்பத்துக்கு குழந்தை பாக்கியம் கர்த்தர் கொடுக்கவும், சகோதரி. எப்சிபா பியூலாவுக்கு படிப்புக்கு ஏற்ற வேலை கிடைக்கவும், சகோதரி. சாந்திக்கு வலது கண் பார்வை கிடைக்கவும், சகோதரி. சின்னம்மா, சகோதரி. ஞானசுந்தரி தொடர்ந்து ஆராதனைக்கு வர தடை ஏற்படாமல் இருக்க ஜெபியுங்கள்.

### தூத்துக்குடி மாவட்டம்

பணித்தளம் : **திருக்களூர்** – சகோதரி. பரமேஸ்வரியின் கர்ப்பம் திறக்கப்படவும், சகோ. பாலா அவர்களின் குடிப்பழக்கத்தினால் குடும்பம் பிரிந்து பிள்ளைகள் படிக்க முடியாத சூழ்நிலை மாறவும் ஜெபியுங்கள். **செம்பூர்** – சகோதரி. கிரேஸ் அவர்களின் கல்லடைப்பும், வயிற்றுவலியும் குணமாகவும், சகோதரி. ரதிகனியின் தலைசுற்றால் அடிக்கடி வரும் பெலவீனம் நீங்கவும் ஜெபியுங்கள். **மானாட்டூர்** சிறுவர்களுக்கு சன்டே கிளாஸ் நடத்த தடையாக வரும் காரியங்கள் மாற... **தேமான்குளம்,** சகோ. கிறிஸ்டோபர் வீடுகட்ட தேவைகள் சந்திக்கப்பட.... **பவுண்டுவாசல்** – சகோ. சுபா நந்தினி வீடுகட்ட தேவைகள் சந்திக்கப்படவும், 2 மாதமாக உடம்பு சரியில்லாமல் இருக்கிற அவர்களின் தாயாருக்காக ஜெபியுங்கள்.

## மிஷனெரி இல்ல பிரதிஷ்டை

நெல்லை மாவட்டம் சின்னக்காளான்பட்டி என்ற ஆலயமில்லா கிராமத்தில் தேவன் அங்கு நடைபெறும் ஆராதனைக்காக ஒரு கட்டுப்பட்டுக்கொண்டிருந்த புதிய வீட்டினை வாங்கி அதை முழுவதும் கட்டிமுடிக்க கிருபை செய்தார். அதற்கான தேவையை சந்திக்க தேவன் திரு. சுபாஸ் சந்திரபோஸ் குடும்பத்தினர், திருமதி. வைலட் லில்லி தயவு குடும்பத்தினர் இணைந்து சந்தித்தனர். அந்த இல்லம் கர்த்தருடைய கிருபையினால் 2-2-2014 ஞாயிறு அன்று மாலை சகோ. D. ஜோசப் செல்லத்துரை, ஒருங்கிணைப்பாளர், MUF, மதுரை அவர்களால் ஜெபத்துடன் பிரதிஷ்டை செய்யப்பட்டது. இதற்காக உழைத்த செயல்பட்ட நமது மிஷனெரி சகோ. P. கோயில் பிள்ளை அவர்களுக்காக தேவனை துதிப்போம். பிரதிஷ்டை முடிந்து மதுரை குழுவனரால் நற்செய்தி கலைநிகழ்ச்சி நடத்தப்பட்டது. வந்திருந்த அனைவருக்கும், கிராம மக்களுக்கும் அன்பின் விருந்தை ஒழுங்கு செய்திருந்தனர் விசுவாசிகள். அச்சபையின் விசுவாசிகளுக்காய் சகோ. பொன்னுச்சாமி அவர்களுக்காய் தேவனை துதிப்போம்.



# “திறந்த வாசல்”

**Dr. பொ. செல்வராஜ்** பொள்ளாச்சி

ஏசாயா தீர்க்கன் இவ்வாறு அறிவிக்கிறார் : முழு உலகின் தேவன் ஒரு வாக்குத்தத்தம் செய்திருக்கிறார். உலகத்தோடு கிருபை மற்றும் சமாதானத்தின் உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்தியிருக்கிறார். எல்லோரும் வந்து அவரோடு புதுவாழ்வு வாழ வீடொன்றை அமைத்திருக்கிறார்.

“கர்த்தரைச் சேவிக்கவும், கர்த்தருடைய நாமத்தை நேசிக்கவும், அவருக்கு ஊழியக்காரராயிருக்கவும், அவரைச் சேர்ந்து, ஓய்வுநாளைப் பரிசுத்தக் குலைச்சலாக்காதபடி ஆசரித்து, என் (கர்த்தரின்) உடன்படிக்கையைப் பற்றிக்கொண்டிருக்கிற அந்நியபுத்திரர் அனைவரையும், நான் (கர்த்தர்) என் பரிசுத்த பர்வதத்துக்குக் கொண்டு வந்து : என் ஜெப வீட்டிலே அவர்களை மகிழப் பண்ணுவேன்; அவர்களுடைய சர்வாங்க தகனங்களும், அவர்களுடைய பலிகளும், என் பலிபீடத்தின் மேல் அங்கீகரிக்கப்பட்டிருக்கும்; என்னுடைய (கர்த்தருடைய) வீடு சகல ஜனங்களுக்கும் ஜெபவீடு என்னப்படும்” – ஏசாயா 56:6-7.

கர்த்தருடைய கிருபையையும், அன்பையும் எல்லா மனிதர்களும் அறிந்து கொள்ளும் வகையில் கர்த்தருடைய வீடானது எல்லா மனிதர்களுக்காகவும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

“வீட்டைப் போல வேறு இடமில்லை” எனும் கூற்றின் உண்மையை அடிக்கடி பயணம் செய்கிறவர்கள் நன்கு அறிவார்கள். “எப்போதாவது நீ சிக்கலில் மாட்டிக் கொண்டாலோ, உன்னால் இயன்ற அளவிற்கு சிறப்பானதை நீ உலகிற்குக் கொடுத்திருந்தபோதிலும் அது உன்னைத் துன்புறுத்தினாலோ, நீ உடனே வீட்டிற்கு வந்துவிடலாம்” என்று செல்ட்ஸின் பெற்றோர் அவரிடம் கூறுவதுண்டாம். ஆம், இல்லம் ஒரு இனிமையான, அருமையான ஒன்று சேரும், ஒன்று கூடும் இடம்.

நம்முடைய வீட்டில் கதவுகள் கூட நமக்கு அடைக்கப்பட்டிருக்கலாம். நாம் சேர விரும்பும் விளையாட்டுக் குழு நமக்கு இடம் தராமல் போகலாம். ஆனால் எல்லோருக்கும் ஒரு திறந்த வாசல் இருக்கிறது. அது கர்த்தருடைய வீடு. நம்முடைய ஜெபவீடு.

ஏசாயாவின் நாட்களில் தேவனுடைய பெயரையும், அவருடைய வாக்குத்தத்தத்தையும், அவர் அருளும் இரட்சிப்பையும் பறைசாற்றிக் கொண்டிருந்த எருசலேம் தேவாலயமானது எல்லோருக்கும் ஜெபவீடாகத் திகழ்ந்தது. பலர் அந்த தேவாலயத்திற்குச் செல்ல புனிதப்பயணம் மேற்கொள்ள வேண்டியிருந்தது.

“யாக்கோபின் கோத்திரங்களை எழுப்பவும், இஸ்ரவேலில் காக்கப்பட்டவர்களைத் திருப்பவும், நீர் (இஸ்ரவேல்) எனக்கு தாசனாயிருப்பது அற்பகாரியமாயிருக்கிறது; நீர் (இஸ்ரவேல்) பூமியின் கடைசிபரியந்தமும் என்னுடைய (கர்த்தருடைய)

இரட்சிப்பாயிருக்கும்படி, உம்மை (இஸ்ரவேலை) ஜாதிகளுக்கு ஒளியாகவும் வைப்பேன் என்கிறார்" ஏசாயா 49:6.

வேதாகமத்தைப் பற்றி தவறான எண்ணங்கள் பல உண்டு. அவற்றுள் ஒன்று வரலாற்று இஸ்ரவேல் ஏன் இன்றைய கிறிஸ்தவ சபைகூட சிறப்பானது என்று வேதாகமம் கூறுவதாக எடுத்துக் கொள்வது. இஸ்ரவேலர் சிறப்பானவர்கள் என்பதால் தேவன் அவர்களைத் தெரிந்து கொள்ளவில்லை. இரட்சிப்பின் செய்தியை எல்லா மக்களுக்கும் தெரியப்படுத்தும் மக்களாக அவர்களை தேவன் தெரிந்து கொண்டார்.

அன்று, எருசலேம் தேவாலயத்திற்குப் புனிதப் பயணம் மேற்கொள்ளப்பட்டது. இன்றோ, அத்தகைய புனிதப் பயணத்திற்கு அவசியமேயில்லை. ஏனெனில், இயேசுவே தேவாலயமாக இவ்வுலகில் அவதரித்தார். அவரை நோக்கி நாம் புனிதப் பயணம் மேற்கொள்ள வேண்டியதில்லை. கிறிஸ்துவின் வார்த்தையாக தேவாலயமே நம்மிடம் வருகிறது. தேவன் மட்டுமே கொடுக்கக்கூடிய கிருபையெனும் அழைப்பிதழ் எல்லா மக்களுக்கும் கடந்து வந்து கொண்டேயிருக்கிறது.

"இயேசு அவர்களுக்குப் பிரதியுத்திரமாக (பதிலாக) : இந்த (எருசலேம்) ஆலயத்தை இடித்துப் போடுங்கள், மூன்று நாளைக்குள்ளே இதை எழுப்புவேன் என்றார்... அவரோ, நம்முடைய சரீரமாகிய ஆலயத்தைக் குறித்துப் பேசினார்" யோவான் 2:19,21.

தேவனுடைய வீட்டைக் குறித்த செய்தி எந்த தேசத்தையும், மக்கள் இனத்தையும் விட மேலானது. அது தலைமுறை, தலைமுறையாக எல்லோரையும் தன்னிடம் வரவேற்கிறது. எல்லா மக்களும் ஒன்று சேரும் இடமொன்று இருக்கிறது . உலக துன்பங்களில் உழல்வோரும், பாவப்பிடியுடன் போராடுவோரும் அந்த இல்லத்திற்கு வரலாம். அது எல்லா மக்களுக்கும் ஜெபவீடு.

தேவனுடைய வீட்டிற்கு நாம் நம்முடைய தகுதியின் அடிப்படையில் செல்ல முடியாது. அதற்கான தகுதியுடையோர் இந்த உலகத்தில் யாருமே இல்லை. இயேசு கிறிஸ்துவில் எல்லோரையும் நேசிக்கும் தேவனுடைய அன்பை அறிந்து அதை விசுவாசிக்கிற யாவரும் ஜெபவீட்டில் ஒன்று சேரலாம். யாவரும் என்ற சொல்லில் நீங்கள் ஒவ்வொருவரும் அடங்குவீர்கள்; நானும் அவ்வண்ணமே, இயேசுகிறிஸ்துவில் தேவன் தரும் அழைப்பிதழை ஏற்றுக்கொள்ளும் யாவருக்கும் ஜெபவீடு திறந்தேயிருக்கிறது. ஆம், கிறிஸ்துவில் எல்லோருக்கும் ஜெபவீடு இருக்கிறது. அது தேவனுடைய வீடும் கூட!

## தூத்துக்குடியில் அற்புத உபவாச நாள்

நாள் : 2014 மார்ச் 25 – கடைசி செவ்வாய்
நேரம் : காலை 10 மணி முதல் மாலை 3 மணி முடிய
இடம் : காமராஜர் திருமண மண்டபம்,
பிரையண்ட் நகர், 5வது தெரு மெயின், தூத்துக்குடி.

*தேவசெய்தி :* **சகோ. பா. பொற்செல்வன் ஆசீர்**



### ஆத்தும ஆதாய இளைஞர் இயக்கம்

## MECOGEN - V.B.S - 2014 - ஜெபக்குறிப்புகள்

இவ்வூழியம் விசேஷமாக கிராம சிறுவர்களுக்காக ஆலயமில்லா கிராமங்களை மையமாக வைத்து நடத்தப்படும் ஊழியமாகும். இந்த ஆண்டு 325 கிராமங்களுக்கும் மேலாக ஒவ்வொரு கிராமங்களிலும் 6 நாட்கள் நடத்தி அதன்மூலம் 16,500 சிறுவர்களுக்குச் சுவிசேஷத்தைச் சொல்லத் திட்டமிட்டுள்ளோம். மொத்த தேவை ரூ. 9 லட்சத்து 75 ஆயிரம்.

1. வெளி3:8இன்படி நாம் திட்டமிட்டபடி 325 கிராமங்களுக்கும் மேலாக கிராமங்களில் திறந்த வாசலை கர்த்தர் நமக்குத் தரும்படியாக...
2. சங்.49:2இன்படி சிறுபிள்ளைகள் செவிகொடுக்க...
3. மாற்.18:14இன்படி எல்லா சிறுவர்களும் இயேசுவை ஏற்றுக்கொள்ள..
4. ஏசா.54:17இன்படி எதிர்ப்புகள் மாற...
5. தன்னார்வ ஊழியர்களைப் பயிற்றுவிக்க நடைபெறும் 2 நாட்கள் பயிற்சி வகுப்புகளை தேவன் ஆசீர்வதிக்க..
6. இப்பணிக்குத் தேவையான 400 தன்னார்வ ஊழியர்களை தேவன் எழுப்ப...
7. நமது ஊழியர்களுடன் தன்னார்வ ஊழியர்கள் கிராமங்களில் பணி செய்யும்போது சக.9:8இன்படி தேவ பாதுகாப்பு இருக்க...
8. ஒரு சிறுபிள்ளைக்குச் சுவிசேஷம் சொல்ல ஆகும் செலவு ரூ..75வீதம் 16.500 பிள்ளைகளைத் தாங்கும் விசுவாச தேவ பிள்ளைகளை அனுப்பித்தர அல்லது ரூ.3000 வீதம் கொடுத்து ஒரு VBS ஐ தாங்குவோரை தேவன் எழுப்ப..
9. கடந்த ஆண்டில் எதிர்ப்பினால் நடத்த முடியாமல் போன கிராமங்களில் தடைகளை மாற்றி, இந்த ஆண்டு நடத்த தேவன் கிருபை தர....
10. இந்த ஆண்டில் திட்டமிட்டுள்ள VBSகள் 325
11. இந்த ஆண்டு VBSஇன் மொத்த தேவை ரூ. 9 இலட்சத்து 75 ஆயிரம் சந்திக்கப்பட
12. நமது மிஷனெரிகளை தன்னார்வ ஊழியர்களை தேவன் வியாதி பெலவீனங்கள் தாக்காது காத்துக்கொள்ள...
13. VBSநடைபெறும் கிராமங்களில் ஆராதனைக் குழுக்கள் ஆரம்பிக்கப்பட தேவன் வாசல்களை திறக்க.
14 VBS நடைபெறும் கிராமங்களில் தேவன் செழிப்பை ஆசீர்வாதத்தைக் கட்டளையிட.

## வாலிபர் வெற்றி முகாமிற்கான ஜெபக்குறிப்புகள்

**வெற்றி முகாம் – நடைபெறும் தேதி மே 22~24**

**இடம் : கிறிஸ்துகுல ஆசிரமம், பராசக்தி கல்லூரி எதிரில், குற்றாலம், நெல்லை மாவட்டம்**

*தேவசெய்தி :* **சகோ. G. ஜேக்கப்** அநாதி சிநேகம் ஊழியங்கள், நாகர்கோவில்
**சகோ. G. அருள்தாஸ்** IFE மதுரை

இம்முகாம் நமது ஆத்தும ஆதாய இளைஞர் இயக்கத்தின் மூலம் வாலிப சகோதர சகோதரிகளின் ஆசீர்வாதத்திற்காக ஆவிக்குரிய வளர்ச்சிக்காக நடைபெறும் வருடாந்திர முகாமாகும். இந்த ஆண்டு முப்பெரும் முகாமாக நடைபெறாமல் வாலிபருக்காக மட்டும் விசேஷித்த முகாமாக நடைபெறவுள்ளது.

15. வெற்றி முகாமின் தேவை ரூ.1½ லட்சம் சந்திக்கப்பட
16. ஏசா43:5-7 வசனங்களின் படி தேவன் முகாமிற்கு வாலிப சகோதர சகோதரிகளைக் கொண்டு வரும்படியாக...
17. ஏசா44:3இன்படி முகாமிற்கு வரும் சந்ததியும் சந்தானமுள்ள வாலிபர் மேல் பரிசுத்த ஆவியாவரையும் ஆசீர்வாதத்தையும் தேவன் ஊற்ற..
18. ஏசா49:25இன்படி பராக்கிரமன் பிசாசினால் சிறைப்படுத்தப்பட்டவர்களும் பெலவந்தன் சாத்தானல் கொள்ளையிடப்பட்டவர்களுமான வாலிபர்கள் அநேகர் அசுத்த ஆவியின் வல்லமையினின்று விடுதலையாகி இந்த முகாமில் இரட்சிக்கப்பட.
19. அப்21:10இன்படி முகாமிற்கு வரும் வாலிபர்கள் தீர்க்கதரிசிகளாய் மாற..

# மிஷனெரி ஆலய பிரதிஷ்டை

தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீமூலக்கரை பணித்தளத்தில், ஸ்ரீமூலக்கரை கிராமத்தில் கர்த்தருடைய கிருபையினால் 22-2-2014 அன்று நமது மிஷனெரி ஆலயம் சகோ. G. அருள்தாஸ் MUF மதுரை அவர்களால் ஜெபத்துடன் பிரதிஷ்டை செய்யப்பட்டது. இது நமது 2வது மிஷனெரி ஆலயத்தின் விரிவாக்கம் செய்யப்பட்ட ஆலயமாகும். இந்த ஆலயம் கட்டப்பட தேவன் பயன்படுத்திய குடும்பத்தினருக்காக தேவனைத் துதியுங்கள். இந்த பணித்தள மிஷனெரி சகோ. மோசஸ் குடும்பத்திற்காக தேவனைத் துதியுங்கள். இந்த ஆலய கட்டுமான பணியில் குடும்பமாக உழைத்தார்கள். இந்த பணித்தளத்தில் மற்றொரு ஆலயமும் இதே நேரத்தில் கட்டப்பட்டு வந்தது. இரண்டு ஆலயப் பணிகளையும் மனந்தளராது ஜெபத்துடன் குடும்பமாக இணைந்து விசுவாசிகளோடு சேர்ந்து செயல்பட்டார்கள். ஸ்ரீமூலக்கரை கிராமத்தில் இணைந்து செயல்பட்ட சகோ. பரமானந்தம் அவர்கள் குடும்பத்தினர் மற்றும் விசுவாசிகளுக்காக தேவனைத் துதியுங்கள்.

இந்த கிராமத்தில் முதலாவது 27-12-1998 அன்று ஒரு இல்லம் வாங்கப்பட்டு ஆராதனைக்கென்று Rev. ஆனந்தராஜ் மதுரை அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டது. அப்போது சகோ. ஏசுநாதன் மிஷனெரியாக இங்கு ஊழியம் செய்தார். 2வது 30-8-2001 அன்று ஆராதனைக்கென்று பிரத்தியேகமாக குமரி மாவட்டம் பாகோடு LMS சபை உதவியுடன் ஒரு சிறிய ஆஸ்பஸ்டாஸ் கூரை கொண்ட ஹால் அப்போதைய பாகோடு LMS சபை போதகர் Rev. திலகர் அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டது. அப்போது சகோ. தேவமகத்துவராஜ் இங்கே மிஷனெரியாக பணியாற்றினார். இப்போது தனியாக இந்த ஆலயம் பெரிய அளவில் கட்டப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. தேவனைத் துதியுங்கள்.



## *நமது ஊழியங்களை தாங்குவோர் கவனத்திற்கு*

நீங்கள் ஜெபத்துடன் நமது மிஷனெரி ஊழியத்தை, வாலிப, மாணவ, சிறுவர் ஊழியத்தை, ஜெப ஊழியத்தை தாங்க காணிக்கைகள் அனுப்பும் போது வங்கி கணக்குகள் மூலமும் அனுப்பலாம்.

| வங்கி கணக்கு பெயர் | IFS Code | வங்கி பெயர் | கணக்கு எண் |
|---|---|---|---|
| மிஷனெரி ஊழியம்<br>Grace Ministries<br>Grace Ministries | SBIN0007629<br>TMBL0000156 | SBI Bazaar, Tuticorin<br>TMB Ltd., Sipcot Tuticorin | 10237757808<br>156100710400123 |
| வாலிப மாணவர் சிறுவர் ஊழியம்<br>Young Soul Winners Mission | TMBL0000035 | TMB Ltd., Pudukottai. Tuty | 035100710400087 |
| ஜெப ஊழியம்<br>Tabernacle of God Mission | TMBL0000033 | TMB Ltd., Elairampannai. | 033100710400026 |

கடிதம் மற்றும் M.O. அனுப்ப தொடர்பு முகவரி :

**சகோ. B. பொற்செல்வன் ஆசீர்**
**கிருபையின் ஊழியங்கள்,** ஆபிரகாம் நகர், பெரியநாயகபுரம், தூத்துக்குடி-628 101.
Grace Ministries, Abraham Nagar, Periyanayagapuram, Tuticorin-628 101.

நீங்கள் அனுப்பும் காணிக்கைகள் யாவும் ஊழியத்தில் வரவு வைக்கப்பட்டு உங்களுக்கு இரசீது அனுப்பப்படும்.

நீங்கள் காணிக்கை அனுப்பியதை 94432-89026 என்ற எண்ணிற்கு SMS மூலமாகவோ அல்லது கடித மூலமாகவோ எங்களுக்கு தெரிவியுங்கள்.

## வாலிபர் வெற்றி முகாம் 2014

Uth Victorious

நாள் : **மே 22 வியாழன் காலை 6 மணி முதல்**
**24 சனி மாலை 3 மணி முடிய**

இடம் : **கிறிஸ்துகுல ஆசிரமம்,** பராசக்தி கல்லூரி எதிரில்,
குற்றாலம், நெல்லை மாவட்டம்

*வெற்றி செய்தி :* **சகோ. G. ஜேக்கப்** அநாதி சிநேகம் ஊழியங்கள், நாகர்கோவில்
**சகோ. G. அருள்தாஸ்** IFE மதுரை
**மற்றும் நமது சகோதரர்கள்**

- முகாமில் பதிவுக்கட்டணம் ரூ. 150/- உணவு உட்பட
- 13 வயதிற்கு மேற்பட்ட வாலிப சகோதர, சகோதரிகள் யாவரும் கலந்து கொள்ளலாம்.
- ஆண், பெண் தங்க தனித்தனி வசதி.
- முந்தின நாள் இரவே தங்க இட வசதி.
- ஆசிரியர்களே, பெற்றோரே, ஊழியர்களே வாலிபர்களை அழைத்து வாருங்கள்.

தொடர்பு : **கிருபையின் ஊழியங்கள்,** தூத்துக்குடி
**அலைபேசி : 94432 89026, 94421 20257**